நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 22.11.2024.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் நவம்பர் –2024ம் மாத சாதாரண கூட்டம் வருகிற 29.11.2024தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

22/11/2024
தலைவர்
ஆத்தூர் நகர்மன்றம் .

மன்ற பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர் /2024 மாதத்தின் நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம் ( ந.க.எண். 2023/2023/இ1)

2 . இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் /2024 மாதத்தின் நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம் ( ந.க.எண். 2023/2023/இ1 )

3 நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் 26740/2024/ SBM – 1 ( 1) நாள். 26.09.2024 ல் 8வது மாநில உயர்மட்ட கூட்டத்தில் (8th SHPC ) தூய்மை இந்தியா திட்டம் 2.O 2024-2025 இன் கீழ் 3 பொது கழிப்பிடங்கள் புனரமைக்க 15.00 இலட்த்திற்கும் மற்றும் சமுதாய கழிப்பிடம் சீரமைக்க ரூ.5.30 இலட்திற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை அதன் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகையில் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டு ஆணையர் அவர்களின் செயல் முறை கடித ந.க.எண் 3100/2024/இ1, நாள் 28..10.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ,எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையத்தில் மேல் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் ( Public Toilet) , புனரமைத்தல் பணி | 7.20 |
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் வடக்கு பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் ( Public Toilet) , புனரமைத்தல் பணி | 2.20 |
| 3 | பழைய பேருந்து நிலையத்தில் கீழ் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் ( Public Toilet) , புனரமைத்தல் பணி | 5.60 |
| 4 | ஆத்தூர் நகராட்சி வார்டு எண் 6ல் கெங்கையம்மன் கோவில் தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடம் () புனரமைத்தல் பணி | 5.30 |

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.( ந.க.எண் 3100/2024/இ1 )

4. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பார உந்து கடை எண்.1 மற்றும் நேருபூங்கா கடை எண்.17ன் உரிமதாரர் திரு.A.B.ராஜமகேந்திரன் என்பவர் கடையினை 2022ஆம் ஆண்டு நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். கடை வாடகை ஏதும் நிலுவை இல்லை. தற்பொழுது கடையினை திரு.சின்னையன் என்பவர் ஏலம் எடுத்து நடத்தி வருகிறார். திரு. A.B.ராஜமகேந்திரன் அவர்கள் செலுத்திய வைப்புத் தொகை ரூ.79466/--ஐ காலங்கடந்த வைப்புத்தொகை நிலுவைப் பதிவேட்டில் வரவெடுக்கப்பட்டுள்ளது. தனியார் செலுத்திய வைப்புத் தொகை ரூ.79466/--ஐ திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி பெற மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 3337/2024/அ4.)

5. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் வெளிப்புற மேற்குப்புற காலியிட பழக்கடை எண் 7–யினை நடத்தி வந்த உரிமதாரர் திருமதி.வி.திவ்யா த/பெ வேலு (இறப்பு) என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆத்தூர் நகராட்சிக்கு எதிராக வழக்கு எண். W.P.No.31683/2024–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு திரு.லூர்து பால் மௌரியா சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தியதற்கு செலவினக் கட்டணம் ரூ.10,000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி பெற மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 3399/2024/அ4.)

6. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் வெளிப்புற மேற்குப்புற காலியிட பழக்கடை எண் 17–யினை நடத்தி வந்த உரிமதாரர் திருமதி.ராணி க/பெ சுப்ரமணி (இறப்பு) என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆத்தூர் நகராட்சிக்கு எதிராக வழக்கு எண். W.P.No.31685/2024–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு திரு.லூர்து பால் மௌரியா சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தியதற்கு செலவினக் கட்டணம் ரூ.10,000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி பெற மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 3401/2024/அ4.)

7. ஆத்தூர் நகராட்சிக்கு தற்காலிக ஓட்டுநர் 6 மாதகாலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ரூ.1.60 இலட்சமதிப்பீட்டில் அமர்த்தி கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1132 நாள். 28.10.2024ல் அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க 15.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S Janishree Coporation Service Private Ltd , Chennai | 1.60 | 0.68%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S.Eeyakai Builders and Devlopers Private Ltd , Chennai | | 1.09%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Janishree Corporation Service Private Ltd , Chennai அவர்களின் மதிப்பீட்டை விட 0.68%சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண்2 333 /2024/இ1)

8. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி அங்காடி அண்ணா பவளவிழ மேற்குப்புற கடை எண்.1 மற்றும் 2 ன் உரிமதாரர் திரு.K.பாலசுப்ரமணியன், என்பவர் கடையினை 2022ஆம் ஆண்டு நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். கடை வாடகை ஏதும் நிலுவை இல்லை. தற்பொழுது கடையினை திரு.சின்னையன் என்பவர் ஏலம் எடுத்து நடத்தி வருகிறார். திரு.K.பாலசுப்ரமணியன்அவர்கள் செலுத்திய வைப்புத் தொகை ரூ.40624/–ஐ காலங்கடந்த வைப்புத்தொகை நிலுவைப் பதிவேட்டில் வரவெடுக்கப்பட்டுள்ளது. தனியர் செலுத்திய வைப்புத் தொகை ரூ.40624/– ஐ திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி பெற மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 3338/2024/அ4.)

9. ஆத்தூர் நகராட்சியில் செயல் திறன் பணியாளர்கள் மூன்று நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் 9 மாதங்களுக்கு தற்காலிகமாக அமர்த்தி கொள்ள ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 1131 நாள். 28.10.2024ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன் படி 14.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருமதி.டி.பழனியம்மாள் | 7.20 | மதிப்பீட்டு விலை விகிதத்தில் |
| 2 | திரு. ஆர்.செல்லக்கண்ணு | | 0.56 %சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.டி.பழனியம்மாள் அவர்களின் மதிப்பீட்டு விலை விலைவிகிதத்தில் கொடுத்து உள்ள ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண் 3332 /2024/இ1)

10. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் முன்புறம் பிரதான சாலையிலிருந்து நடைபாதை அமைத்தல் மற்றும் வணிகவளாகத்திற்கு கூடுதலாக மின்இணைப்பு பணிகள் ரூ.24.50 இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்1134 நாள். 28.10.2024ல் அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க , 15.11.2024ல் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும்

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S V.S.ASSOCIATIES ,Attur | 24.50 | 0.02%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S.Sri Devi Constructions , Attur | | 0.09%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S V.S.ASSOCIATIES ,Attur அவர்களின் மதிப்பீட்டை விட 0.02% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண் 3337 /2024/இ1)

11. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் ஈப்பு வாகனஎண் TN 77 E 7053 க்கு வாகனத்திற்கு இரண்டு டயர்கள் தேய்ந்து விட்ட காரணத்தால் அதனை உடனடியாக மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது . எனவே மேற்படி வாகனத்திற்கு இரண்டு டயர்கள் மாற்றம் செய்ய ரூ.19300/– ஐ செலவினம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி வாகத்திற்கு இரண்டு டயர்கள் மாற்றி அமைக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கரிக்கலாம். ( ந.க.எண்3379.2024.இ1 )

12. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் ஈப்பு வாகனஎண் TN 77 B 5356ஐ வாகனத்தின் சென்சார் பாயிண்ட் பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத காரணத்தால் அதனை உடனடியாக மராமத்துப்பணி செய்யப்பட வேண்டியுள்ளது . எனவே மேற்படி பழுதினை மராமத்துப்பணி செய்யவும் அதற்கு ஆகும் செலவினம் ரூ.26500 /– ஐ செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி வாகனத்திற்கு சென்சார் மாற்றி அமைக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கரிக்கலாம். (ந.க.எண் 3410/2024/இ1 )

13. பழைய பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகளின் வடக்கு பகுதி மற்றும் தெற்கு பகுதியில் கடைகள் ரூ.11.50 இலட்ச மதிப்பீட்டில் கட்டுதல் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1010 நாள். 31.07.2024ல் அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க 15.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S V.S.ASSOCIATIES ,Attur | 11.50 | 0.01%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S.Sri Devi Constructions , Attur | | 0.22%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S V.S.ASSOCIATIES ,Attur அவர்களின் மதிப்பீட்டைவிட 0.01 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண் 2254 /2024/இ1)

14. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்படும் வணிக வளாகத்தில் கூடுதல் பணிகள் ரூ. 24.00 இலட்ச மதிபபீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1135 நாள்.28.10.2024ல் அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க 15.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்பள்ளிகள்பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S V.S.ASSOCIATIES ,Attur | 24.00 | 0.02%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S.Sri Devi Constructions , Attur | | 0.12%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S V.S.ASSOCIATIES ,Attur அவர்களின் மதிப்பீட்டை விட 0.02% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண் 3337 /2024/இ1)

15. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு–இ , பிளாக்–11, நகரளவை எண்–59/7 –இல் அமைந்துள்ள 1.1875 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் திருமதி.சசிகலா க/பெ வரதராஜன் என்பவரால் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் மாவட்டம் அவர்களின் கோப்பு எண். SLM/OAI94UTA/27115/2024/TCP/2024TCP நாள்.24.10.2024 –ந் தேதிய கடிதம் மற்றும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு (SWP/DTCP/SALEM/Layout NO) 266 /2024 திட்ட அனுமதி எண்.93/2024 என எண்ணிடப்பட்டு பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை இந்நகராட்சிக்கு தானமாக தானப்பத்திர ஆவண எண். 5816/2024 மற்றும் பிழைதிருத்தப் பத்திரம் எண்.6533/2024 –இல் வழங்கியுள்ளார்.

எனவே சிறப்பு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மனைப்பிரிவு அனுமதி அளிப்பதற்கான கட்டணங்களை வசூலிக்கவும்,பொது உபயோக இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யவும், அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டபின் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவிற்கு கட்டணங்களை வசூலிக்கவும்,பொது உபயோக இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றவும், அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 3426 /2024/எப்1)

16. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பழைய புல எண்–274/12,273/3,4 வார்டு –பி, பிளாக்–20, நகரளவை எண்– 1/12,4/19,4/20– இல் அமைந்துள்ள 1.96 ஏக்கர் நிலத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய மற்றும் கல்வி உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய இந்நகர்மன்ற தீர்மானஎண் 1119 நாள்.30.09.2024–இல் தினசரி தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழில் பிரசுரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டதையடுத்து திரு.R செந்தில்குமார் த/பெ ராஜு என்பவரின் விண்ணப்பத்தில் கடந்த 19.10.2024 அன்று THE NEW INDIAN EXPRESS என்ற ஆங்கிலம் நாளிதழிலும், தினமணி என்ற தினசரி தமிழ் நாளிதழிலும் மனுதாரரால் இவ்வலுவலக முகவரியிடப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி செய்தி வெளியான நாளிலிருந்து 30 தினங்கள் வரை பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகளும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய மற்றும் கல்வி உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது தொடர்பாக உள்ளூர் திட்டக்குழுமத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மனுதாரரின் 1.96 ஏக்கர் நிலத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய மற்றும் கல்வி நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. செய்தி வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் வரை பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபணை ஏதும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய மற்றும் கல்வி நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் அளித்து அனுமதிக்கலாம். ( ந.க.எண்.2856 /2024 /எப்1)

**17.** ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட முல்லைவாடி கிராம பழைய புல எண்கள் 380,388,389,418,419 வார்டு–A, பிளாக்–16, புதிய நகரளவை எண்கள் 16–இல் திரு.ராஜராஜன் என்பவர் தனக்கு சொந்தமான நிலத்தில் தனிநபர்கள் பொதுப்பாதை அமைத்துள்ளதாக மேன்மைமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆத்தூரில் வழக்கு எண் O.S.NO 78/2023 ராஜராஜன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் 6–ஆம் பிரதிவாதியாக ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.எஸ்.கதிரேசன் என்பவர் ஆஜராகியுள்ளார்.அதற்கான வழக்கு கட்டணம் ரூ.5000/–ஐ வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ;

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1417/2023/எப்1)

**18.** ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மேட்டு தெருவில் வசிக்கும் திருமதி. கமலம் (எ) கமலம்மாள் என்பவர் சேலம் – கடலூர் மெயின் ரோட்டில் உள்ள பழைய புல எண் 534,534.A,B,C,D- இல் உள்ள ஸ்ரீ சண்முகா நந்தா சேகோ பேக்டரி மேல்புறம் பகுதிக்கும், தாவப்பர் தெருவில் கதவு எண் 99/A- இல் உள்ள கட்டிடத்தின் மீது உரிமை கோரி மேன்மைமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆத்தூரில் வழக்கு எண் O.S.NO 86/2020 - இல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் 18–ஆம் பிரதிவாதியாக ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.எஸ்.கதிரேசன் என்பவர் ஆஜராகியுள்ளார்.அதற்கான வழக்கு கட்டணம் ரூ.5000/–ஐ வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1433 /2024 /எப்1)

19. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மாரிமுத்து தெருவில் கதவு எண் 35C –இல் வசிக்கும் திருமதி. நிர்மலா என்பவர் புதிய பேருந்து நிலையத்தின் வெளிப்புற பகுதியில் மனுதாரரால் போடப்பட்ட AC ஷீட் திறந்த வெளிக்கடையினை நகராட்சி அதிகாரிகளால் அப்புறப்படுத்தாமல் இருக்க ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கக்கோரி மேன்மைமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆத்தூரில் வழக்கு எண் O.S.NO 179/2022 - இல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதியாக ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.எஸ்.கதிரேசன் என்பவர் ஆஜராகியுள்ளார்.அதற்கான வழக்கு கட்டணம் ரூ.5000/–ஐ வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1436 /2024 /எப்1 )

20. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கோட்டை வடக்கு தெருவில் வசிக்கும் திரு. கதிர்வேல் என்பவர் வார்டு–A, பிளாக்–28, நகரளவை எண் 172–இல் 0.0182.5 ச.மீ பரப்பளவில் உள்ள தெருவினை 1–ஆம் பிரதிவாதி திருமதி.காமாட்சி என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதாக தெரிவித்து மேன்மைமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆத்தூரில் வழக்கு எண் O.S.NO 4/2022 - இல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதியாக ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.எஸ்.கதிரேசன் என்பவர் ஆஜராகியுள்ளார்.அதற்கான வழக்கு கட்டணம் ரூ.5000/–ஐ வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1441 /2024 /எப்1 )

21. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய உணவு விடுதி கடை எண் 2ஐ ( வரிவிதிப்பு எண் 045/66) திரு. D. சரவணன் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். இக்கடையின் மேல் தளம் பழுதடைந்து மழைக்காலங்களில் ஒழுகுவதால் வியாபாரம் செய்வதற்கு மிகுந்த சிரமமாக உள்ளதால் தன்னுடைய சொந்த செலவில் மேற்கூரையை மராமத்து பணி மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு விண்ணபித்துள்ளார். எனவே மேற்படி கடையின் மேல் தளம் பழுதடைந்துள்ளதால் குத்தகைதாரரின் சொந்த செலவில் கீழ்கண்டுள்ள நிபந்தனை களுக்குட்ப்பட்டு மராமத்துப்பணி செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. குத்தகைதாரர் கடையினை ஒப்படைக்கும்பொழுது பராமரிப்பு செய்தவாறே நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும். மேற்கூரை மராமத்துப்பணி செலவினத் தொகை நகராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.
2. மேற்படி பணி நடைபெறு. பொழுது அருகாமையில் உள்ள கடைகளுக்கும், பொதுமக்களுக்கு. மற்றும் போக்குவரத்துக்கும் ,இடையூறு ஏற்படாத வகையில் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. மேலும் மேற்படி கடைக்கு மேற்கொள்ளும் போது மின்இணைப்பு மாற்ற நேரிட்டால் மின் இணைப்பு கட்டணம் குத்தகைதாரரே முழுபொறுப்பு ஏற்க வேண்டும்.
4.மேற்படி பணி நடைபெறும் பொழுது நகராட்சி பொறியியல் பிரிவில் அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. மேற்படி பணி மேற்கொள்ளும் போது உரிய பணி பாதுகாப்புடன் பணி மேற்கொள்ளப்பட வேண்டும், ஏதேனும் அசம்பாவிதம் ஏற்ப்பட்டால் குத்தகை தாரரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது .
6. மேலும் குத்தகைதாரர் மேற்படி மராமத்து பணி தனது சொந்த செலவில் மேற்கொள்வதால் எதிர்வரும் காலத்தில் மேற்படி கடையின் உரிமம்/ ஏலம் போன்றவைகளில் எந்த வித உரிமை கோர இயலாது என்றும் மேற்படி கட்டிடம் நகராட்சி நிர்வாகத்திற்கு சொந்தமானது என்றும் தங்களது உரிம காலம் முடிவுற்றபின் சட்டவிதிகளுக்கு உட்ப்பட்டு அனைத்து நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படும்.
7. மேலும் குத்தகைதாரர் நகராட்சி மூலம் ஏலம் விட்டு ஒப்படைக்கப்பட்ட அளவிற்கு ம்ட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். ஏதேனும் கூடுதலான அளவிற்கு பணி மேற்கொள்ளப்பட்டால் குத்தகைதாரரின் உரிமம் இரத்து செய்ய சட்ட விதிகளின் ப்டி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. மேற்படி உரிம இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித உரிமை கோராமலும் ஆட்சேபனையின்றி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்3381/2024/இ1 )

22. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய வெளிப்புற கடை எண் 3ஐ ( வரிவிதிப்பு எண் 045/56) திரு. ஜோதி மணி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். இக்கடையின் மேல் தளம் பழுதடைந்து மழைக்காலங்களில் ஒழுகுவதால் வியாபாரம் செய்வதற்கு மிகுந்த சிரமமாக உள்ளதால் தன்னுடைய சொந்த செலவில் மராமத்துப்பணி மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி கடையினை மேற்கூரை பழுதடைந்துள்ளதால் குத்தகைதாரரின் சொந்த செலவில் கீழ்கண்டுள்ள நிபந்தனை களுக்குட்ப்பட்டு மராமத்துப்பணி செய்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. குத்தகைதாரர் கடையினை ஒப்படைக்கும்பொழுது பராமரிப்பு செய்தவாறே நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும். மேற்கூரை மராமத்துப்பணி செலவினத் தொகை நகராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.

2. மேற்படி பணி நடைபெறு. பொழுது அருகாமையில் உள்ள கடைகளுக்கும், பொதுமக்களுக்கு. மற்றும் போக்குவரத்துக்கும் ,இடையூறு ஏற்படாத வகையில் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. மேலும் மேற்படி கடைக்கு மேற்கொள்ளும் போது மின்இணைப்பு மாற்ற நேரிட்டால் மின் இணைப்பு கட்டணம் குத்தகைதாரரே முழுபொறுப்பு ஏற்க வேண்டும்.

4. மேற்படி பணி நடைபெறும் பொழுது நகராட்சி பொறியியல் பிரிவில் அனுமதி பெற்ற பின்னேரே மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.மேற்படி பணி மேற்கொள்ளும் போது உரிய பணி பாதுகாப்புடன் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் , ஏதேனும் அசம்பாவிதம் ஏற்ப்பட்டால் குத்தகை தாரரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

6. மேலும் குத்தகைதாரர் மேற்படி மராமத்து பணி தனது சொந்த செலவில் மேற்கொள்வதுடன் எதிர்வரும் காலத்தில் மேற்படி கடையின் உரிமம்/ ஏலம் போன்றவைகளில் எந்த வித உரிமை கோர இயலாது என்றும் மேற்படி கட்டிடம் நகராட்சி நிர்வாகத்திற்கு சொந்தமானது என்றும் தங்களது உரிம காலம் முடிவுற்றபின் சட்டவிதிகளுக்கு உட்பட்டு அனைத்து நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படும்.

7. மேலும் குத்தகைதாரர் நகராட்சி மூலம் ஏலம் விட்டு ஒப்படைக்கப்பட்ட அளவிற்கு மட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். ஏதேனும் கூடுதலான அளவிற்கு பணி மேற்கொள்ளப்பட்டால் குத்தகைதாரரின் உரிமம் இரத்து செய்ய சட்ட விதிகளின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. மேற்படி உரிம இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித உரிமை கோராமலும் ஆட்சேபனையின்றி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்3382/2024/இ1)

23. இந்நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்கு உள்ள பொதுபிரிவு , பொறியியல் பிரிவு நகராமைப்பு பிரிவு வருவாய் பிரிவு பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் மானிட்டர்கள் மிகவும் பழைமையானது தற்போது உள்ள தொழில் நுடபத்திற்கு ஏற்றவாறு மேற்படி கணினிகளை இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் அவவைகளை சரி செய்ய இயலாது என்பதால் அனைத்துப்பிவுகளிலும் உள்ள கணினிகள் தொடர்பான பணிகள் துரிதமாக பணிகள் செய்திட கீழ்கண்டவாறு புதிய கணினிகள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | புதியதாக கொள்முதல் செய்யப்படும் கணினிகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாணிடர்() | 5 எண்ணிக்கைகள் |
| 2 | கணினிகள் | 3 எண்ணிக்கைகள் |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். இசசெலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

24 இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தின் வெளிப்புற கடைகளின் பின்புற கடை எண்கள் 3,4,9,மற்றும் 10 ஐ ஆகிய கடைகளை திரு.ஜீ.ராஜேந்திரன், குத்தகைதாரர் ஏலம் எடுத்து நடத்தி வருகிறார். மேற்படிகடைகளின் மேற்கூரை AC Sheet பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றி கான்கீரிட் ( RCC ) தளமாக தனது சொந்த செலவில் அமைத்துக் கொள்ள மனுஅளித்துள்ளார். எனவே மேற்கண்ட AC Sheet Roof அகற்றி மேற்கூரையை கான்கீரிட் ( RCC Roof ) தளமாக குத்தகைதாரரின் சொந்த செலவில் கீழ்கண்டுள்ள நிபந்தனை களுக்குட்ப்பட்டு மேற்கூரையை கான்கீரிட் தளம் அமைத்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. குத்தகைதாரர் கடையினை ஒப்படைக்கும்பொழுது பராமரிப்பு செய்தவாறே நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும். மேற்கூரை கான்கீரிட் தளம் அமைக்கப்படும் செலவினத் தொகை நகராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.
2. மேற்படி கடைகள் மேற்கூரையை அமைக்க வேண்டிய முறையான வரைபடம் சமர்ப்பித்து அதற்கான அனுமதி பொறியியல் பிரிவில் பெறப்படவேண்டும்.
3. மேற்படி பணி நடைபெறும் பொழுது இந்நகராட்சி உதவிபொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரை பெற்று பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. RCC கூரை அமைக்கும் போது அதற்கேற்ற தேவையான RCC Framed Structure ( அஸ்திவாரம் கட்டிடம் ) அமைக்கப்படவேண்டும்.
5. RCC Framed Structure ஆக மாற்றி அமைத்தபின் அதற்குண்டான வாடகை நிர்ணயம் செய்யப்படும்.
6. மேற்படி பணி மேற்கொள்ளும் போது உரிய பணி பாதுகாப்புடன் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் .ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் குத்தகை தாரரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.
7. மேலும் மேற்படி கடைக்கு கான்கீரிட் தளம் அமைக்கும் பொழுது மின்இணைப்பு மாற்ற நேரிட்டால் மின் இணைப்பு கட்டணம் குத்தகைதாரரே முழுபொறுப்பு ஏற்க வேண்டும்.
8. மேற்படி கான்கீரிட் தளம் அமைக்கும் பொழுது அருகாமையில் உள்ள கடைகளுக்கு பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் ,இடையூறு ஏற்படாத வகையில் கான்கீரிட் தளம் அமைக்கப்பட வேண்டும்.
9. மேலும் குத்தகைதாரர் மேற்படி பணி தனது சொந்த செலவில் மேற்கொள்வதுடன் எதிர்வரும் காலத்தில் மேற்படி கடையின் உரிமம்/ ஏலம் போன்றவைகளில் எந்த வித உரிமை கோர இயலாது என்றும் மேற்படி கட்டிடம் நகராட்சி நிர்வாகத்திற்கு சொந்தமானது என்றும் தங்களது உரிமை காலம் முடிவுற்றபின் சட்டவிதிகளுக்கு உட்ப்பட்டு அனைத்து நடவடிக்கைக்களும் மேற்கொள்ளப்படும்.
10. மேலும் குத்தகைதாரர் நகராட்சி மூலம் ஏலம் விட்டு ஒப்படைக்கப்பட்ட அளவிற்கு மட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். ஏதேனும் கூடுதலான அளவிற்கு பணி மேற்கொள்ளப்பட்டால் குத்தகைதாரரின் உரிமம் இரத்து செய்ய சட்ட விதிகளின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
11. மேற்படி உரிம இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித உரிமை கோராமலும் ஆட்சேபனையின்றி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண் 3000/2024/இ1 )

25. ஆத்தூர் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் 18443 குடியிருப்புகள் 3267 வணிக நிறுவனங்கள் மற்றும் 204 தொழில் சாலைகள் உள்ளன. நகராட்சி நிர்வாக இயக்குனர் சுற்றறிக்கை ந.க.எண்.2571/2017/எச்–1 நாள்.23.04.2018–ன் படி ஆத்தூர் நகராட்சி பகுதியில் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு மற்றும் இதர காய்ச்சல்கள் தடுப்பு நடவடிக்கை கொசு ஒழிப்பு பணியாளர்கள் தற்போது பணியில் உள்ள 36 –க்கு காலநீட்டிப்பு 1.9.2024 முதல் 31.03.2025 கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மேற்கண்ட விவரபடியாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்த புள்ளி கோரி நியமனம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ–30 இலட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஒப்பந்த புள்ளி கோரும் நடவடிக்கைகள் முடியும் வரை தற்போது பணியாளர்கள் வழங்கி வரும் உதயா மகளிர் சுய உதவி குழுவின் மூலம் பணியினை தொடந்து செயல்படுத்தவும் அதற்கான செலவினத்தினை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

கொசு ஒழிப்பு பணியின் அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் ( (ந.க.எண். 2700 /2024/எச்–1)

26. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பொது கழிப்பிடங்கள், பேருந்து நிலையம் மற்றும் பிற இடங்களில் கிருமி நீக்கம் செய்ய தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் 20 டன் பிளிச்சிங் பவுடர் 5 டன் வாங்க இந்நகர் மன்ற தீர்மான எண்.1072 நாள். 30.09.2024– இல் அனுமதி வழங்கியதற்கிணங்க 20.11.2024–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விநியோகம் செய்யும் நிறுவனம் | பொருள் | விபரம் | எண்ணால் |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் | நீர்த்த சுண்ணாம்பு தூள் | கிலோ ஒன்றின் விலை | ரூ.8.40 |
| | | பிளிச்சிங் பவுடர் | கிலோ ஒன்றின் விலை | ரூ.38.50 |
| 2. | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் | நீர்த்த சுண்ணாம்பு தூள் | கிலோ ஒன்றின் விலை | ரூ.8.93 |
| | | பிளிச்சிங் பவுடர் | கிலோ ஒன்றின் விலை | ரூ.45.67 |
| 3. | சன் பிரைட் டூல்ஸ் | நீர்த்த சுண்ணாம்பு தூள் | கிலோ ஒன்றின் விலை | ரூ.7.90 |
| | | பிளிச்சிங் பவுடர் | கிலோ ஒன்றின் விலை | ரூ.34.90 |

அலுவலக குறிப்பு :

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சன் பிரைட் டூல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண் 2477/2024/எச்1)

27. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளில் மக்கும் கழிவுகளை அரைத்து உரம் தயார் செய்ய நான்கு நுண்உரமையங்களிலும் உள்ள அரைக்கும் இயந்திரங்களை பழுது நீக்கம் செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண். 1076 நாள். 30.09.2024– இல் அனுமதி வழங்கியதற்கிணங்க 20.11.2024–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் | 4.60 | 0.10%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் | | 0.22%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன்அவர்கள் மதிப்பீட்டை விட 0.10%சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். .(ந.க.எண். 2990 /2024/எச்1)

28. ஆத்தூர் நகராட்சியில் வார்டு 4–ல் உள்ள இடுகாடு மற்றும் வார்டு 26–ல் உள்ள இடுகாடுகளில் புல்புதர்கள், முட்செடிகளை JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண். 1430 நாள். 30.09.2024– இல் அனுமதி வழங்கியதற்கிணங்க 20.11.2024–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1. | Senthur Constructions Attur | 1.00 | 0.10%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | Shri Palani Engineering works Attur | | 0.52%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Senthur Constructions Attur அவர்கள் மதிப்பீட்டை விட 0.10%சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1430 /2024/எச்1)

29. இந்நகராட்சிக்கு சொந்தமான முட்டல் தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று கிணறுகள் மூலம் பெறப்படும் குடிநீரை முல்லைவாடி மற்றும் நாரயாணபுரம் மேல் நிலை நீர்தேக்க தொட்டியின் மூலம் முல்லைவாடி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் முல்லைவாடி மேல் நிலை நீர்தேக்க தொட்டியில் உள்ள கேஸ் குளோரின் பிளான்ட் ( Gas Chlorine Plant ) பழுதடைந்த நிலையில் உள்ளதால் பீளிச்சிங் பவுடர் குடிநீரில் கலந்து விநியகோம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தமிழ் நாடு குடிநீர் வாடிகால் வாரிய அலுவலர்கள் ஆய்வின் போது முட்டல் தலைமை நீரேற்று நிலையத்தில் கேஸ் குளோரின் பிளான்ட் ( Gas Chlorine Plant ) அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது . எனவே முட்டல் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக கேஸ் குளோரின் பிளான்ட் ( Gas Chlorine Plant ) அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு 13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவல்க குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். இசசெலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம். ( நக.எண்3620/2024/இ1 )

30. இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்31 அம்பேத்கார் நகர் பகுதியில் 15வது நிதிக்குழு ( Health ) திட்டத்தின் கீழ் ரூ.30.00 இலட்ச மதிப்பீட்டில் புதிதாக நகர்புற துணை சுகாதார நிலையம் ( UPSC ) அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி நகர்நல மையம் அமைமந்துள்ள இடம் பாதுகாப்பாகவும்,சுகாதாரகமாக இருக்கவும் ஆக்கிரப்பு ஏற்படாமல் தவீர்க்கும் பொருட்டு மேற்படி நகர் நல மையத்திற்கு புதிதாக சுற்றுசுவர் அமைக்கவும், அவ்விடத்தில் உள்ள மழைநீர் வடிகால் வசதியினை மாற்றிமையத்து அதன் மேல் பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்கவும் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள சுற்றுசுவரின் உட்பகுதியில் சிமெண்ட் கற்களால் ஆன தளம் அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.24.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். இசசெலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம். ( 3593/2024/இ1 )

31. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் 2024–2025 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் அரை ஆண்டு சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் அனைத்தையும் 31.10.2024–க்குள் நகராட்சி கருவூலகத்தில் செலுத்துவதற்கும், சொத்துவரி செலுத்துபவர்களுக்கும் 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செய்தி வெளியீட்டின்படி சொத்துவ்ரி செலுத்த வேண்டி தனியார் துறை மூலம் ஆட்டோ விளம்பரம் செய்யவும், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 10 இடங்களில் பேனர்கள் வைக்கவும், துண்டு பிரசுரங்கள் அச்சிடவும் மற்றும் செய்தித் தாள்களில் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.64213 /–க்கும், பணி மேற்கொள்ள அனுமதிற்க ம்ன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்கண்ட செலவினத் தொகையை நகராட்சி பொது நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து செலவழிக்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க. எண். 1263/2024/அ1 )

32. அரசாணை ( நிலை ) எண்.166 ந.நி.ம.கு.வ.துறை நாள்.23.11.2016–ன் படி நகராட்சி பகுதியில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் பள்ளி வளாகம் தூய்மை செய்யும் பணிக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சி தொடக்கப்பள்ளி கடைவீதியில் உள்ள பள்ளியில் திருமதி.சுமதி என்பவர் கடந்த அக்டோபர் 2023 முதல் தற்போது வரை பணி செய்து வருவதாகவும், அவருக்கு இதுநாள் வரை எவ்வித பணப்பயனும் வழங்கப்படவில்லை என அப்பள்ளி தலைமையாசிரியர் கடிதம் அளித்துள்ளார். இந்நிலையில் 1 பெண் தூய்மை பணியாளரின் ஊதியத் தொகை அக்டோபர் 2023 முதல் செப்டம்பர் 2024 வரை 12 மாதங்கள் நிலுவையில் உள்ளது. அந்த ஊதியத் தொகை நிலுவை ரூ. 120000/. உத்தேசமாக வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்கான செலவினத்தினை தொடக்க கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2678 /2016 /எச்1)

22/11/2024

தலைவர்
ஆத்தூர் நகர்மன்றம்